முழுப் பதிப்புரிமையுடையது.

SRI LANKA

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் III பரீட்சை – 2025 சனவரி

## (304) நிறுவனம் மற்றும் தனிநபர் வரியியல்

(Corporate & Personal Taxation)

2025-02-02
பிற்பகல்
[01.45 – 05.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

பக்கங்கள் : 08
வினாக்கள் : 09

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *வழங்கப்பட்டுள்ள **விடைப் புத்தகத்தில்** நீங்கள் விண்ணப்பித்த **மொழி மூலத்திலேயே விடைகள்** எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் ஏதேனும் எடுகோள்களை மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை **மாத்திரம்** அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்** அவற்றின் **வரைவிலக்கணங்களுடன்** இணைக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு **செயல் வினைச் சொல்லை** கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

**இராமன்** ஒரு இலங்கைப் பிரஜை ஆவார். அவர் 2023 செப்ரெம்பர் 25 ஆந் திகதி அவுஸ்திரேலியாவுக்கு குடிபெயர்ந்தார். எவ்வாறாயினும், அவருடைய தாயார் திடீரென மரணமடைந்ததால் அவர் 2024 மார்ச் 15 இல் இலங்கைக்குத் திரும்ப வேண்டியிருந்ததுடன் 2024 மார்ச் 25 இல் இலங்கையில் இருந்து புறப்பட்டுச் சென்றிருந்தார்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, வரிமதிப்பாண்டு 2023/24 இற்கான இலங்கையில் வரிவிதிப்பு நோக்கத்திற்காக **இராமனின்** வதிவிட அந்தஸ்தை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

### வினா 02

(a) கூரைத் தகடுகளை இறக்குமதி செய்து அவற்றை உள்ளூர் சந்தையில் விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ள **மாலா டிரேடர்ஸ்** சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரிக்குப் (SSCL) பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனம் ஆகும். 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான அதன் புரள்வு (turnover) ரூபா 165,000,000/- ஆகும்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

2024 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்காக **மாலா டிரேடர்ஸ்** செலுத்த வேண்டிய சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரியைக் (SSCL) **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(b) **வரையறுக்கப்பட்ட ABC (தனியார்) கம்பனி** பங்கொன்று ரூபா 50/- விலையிலான **XYZ PLC** (கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் விலைகோரப்பட்ட ஒரு கம்பனி) இன் 100,000 பங்குகளுக்குச் சொந்தக்காரராக உள்ளது. கம்பனியின் பணிப்பாளர்கள் அந்த முதலீட்டை விற்பனை செய்யத் தீர்மானித்தனர். அதன்படி, 2024 மார்ச் 15 இல் பங்கொன்று ரூபா 240/- விலையில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் உள்ள ஒரு தரகர் ஊடாக 50,000 பங்குகள் விற்பனை செய்யப்பட்டன.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

**வரையறுக்கப்பட்ட ABC (தனியார்) கம்பனி** செலுத்த வேண்டிய பங்குப் பரிமாற்ற வரியைக் (Share Transaction Levy) **கணிக்குக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

**சிறிசேனா** மற்றும் **ஜயதேவா** ஆகியோர் **ஜயசிறி டிரேடர்ஸ்** இன் பங்காளர்கள் ஆவர். அவர்கள் இலாப, நட்டங்களை முறையே 2 : 1 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றனர். **சிறிசேனா,** தனக்கு **ஜயசிறி டிரேடர்ஸ்** இலிருந்து கிடைக்கும் இலாபத்தைத் தனது மகனுடன் சமமாகப் பகிர்ந்து கொள்கின்ற மற்றுமொரு பங்குடமை உடன்படிக்கையைச் செய்துகொள்ளத் திட்டமிடுகிறார். இந்த ஏற்பாடு தொடர்பான வருமான வரி விளைவை (income tax implication) அறிந்து கொள்ள **சிறிசேனா** விரும்புகிறார்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

*A.A. Davoodbhoy Vs CGIR* என்ற வழக்கையும் 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளையும் ஆதாரமாகக் கொண்டு **சிறிசேனா** மற்றும் அவரது மகனுக்கு இடையிலான உடன்படிக்கையின் வருமான வரி விளைவுகளை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 04

(a) **கிரவுண் ஹோல்டிங் பீஎல்சீ** ஆனது 2024 மார்ச் மாதத்தில் கீழ்வரும் கொடுப்பனவுகளை மேற்கொண்டிருந்தது :

(1) ஒரு வதிவாளரான **திரு. சில்வா**வுக்கு ரூபா 120,000/- வாடகைக் கொடுப்பனவு.

(2) நடப்பு ஆண்டின் இலாபத்தில் இருந்து செலுத்தப்பட்ட இடைக்காலப் பங்கிலாபங்கள் ரூபா 12,000,000/-.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

**கிரவுண் ஹோல்டிங்ஸ் பீஎல்சீ** இனால் ஒவ்வொரு கொடுப்பனவு மீதும் கழிக்கப்பட வேண்டிய முற்பண வருமான வரியைக் (AIT) **கணிக்குக.** (02 புள்ளிகள்)

(b) தனியாள் முற்பண வருமான வரித் (APIT) திட்டத்தின் கீழ், தொழில்தருநர் (employer) ஒருவரின் மூன்று (03) கடப்பாடுகளைக் (obligations) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# பகுதி B

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

பொம்மைகளைத் தயாரித்து விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ள **வரையறுக்கப்பட்ட ஸ்கை கிட்ஸ் (தனியார்) கம்பனி** என்பது பெறுமதி சேர் வரிக்குப் (VAT) பதிவு செய்யப்பட்ட ஒரு நபர் ஆகும்.

2024 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான பின்வரும் தகவல்கள், வணிகத்தின் கணக்கேடுகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

(1) 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான விற்பனை விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன (VAT உள்ளடக்கப்படாதது) :

| | ரூபா |
|---|---|
| மென்மையான பொம்மைகளின் ஏற்றுமதி விற்பனை | 137,660,000 |
| மென்மையான பொம்மைகளின் உள்நாட்டு விற்பனை | 87,764,000 |

(2) காலாண்டின்போது கம்பனி பின்வரும் உள்ளீட்டு வரிகளைச் செலுத்தியிருந்தது :

| | ரூபா |
|---|---|
| மூலப்பொருள்களின் இறக்குமதி மீது | 12,375,000 |
| மூலப்பொருள்களின் உள்நாட்டுக் கொள்வனவு மீது | 765,000 |
| அலுவலகச் செலவினங்கள் மீது | 124,000 |

(3) முன்னைய காலாண்டிலிருந்து முன்கொணரப்பட்ட மிகை உள்ளீட்டு VAT தொகை ரூபா 48,000/-.

(4) கம்பனியானது காலாண்டின் காலப்பகுதியில் மாதாந்த VAT தவணைக் கட்டணமாக ரூபா 500,000/- ஐச் செலுத்தியிருந்தது.

*(நியம VAT வீதத்தை 18% ஆகக் கொள்க.)*

**நீங்கள் செய்ய வேண்டியது :**

2024 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்காகச் செலுத்த வேண்டிய மீதி / (மேலதிகமாகச் செலுத்திய) பெறுமதி சேர் வரியை (VAT) **மதிப்பிடுக.** (10 புள்ளிகள்)

## வினா 06

இலங்கையில் உள்ள ஒரு வதிவிடக் கம்பனியான **வரையறுக்கப்பட்ட ஸ்டார் வில்லா (தனியார்) கம்பனி,** ரூபா 600,000/- என்ற மதிப்பிடப்பட்ட வரிப் பொறுப்புடன் வரிமதிப்பாண்டு (Y/A) 2023/24 இற்கான மதிப்பிடப்பட்ட செலுத்த வேண்டிய வருமான வரிக் (SET) கூற்றினைச் சமர்ப்பித்துள்ளது. எவ்வாறாயினும், மேற்கொள்ளப்பட்ட இறுதி வரிக் கணிப்பீட்டின்படி, கம்பனி வரிவிதிக்கத்தக்க நட்டம் ஒன்றைச் சந்தித்துள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) Y/A 2023/24 இற்காக மதிப்பிடப்பட்ட செலுத்த வேண்டிய வருமான வரிக் கூற்றைத் தாக்கல் செய்வதற்கான உரிய திகதியைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) Y/A 2023/24 இற்கான காலாண்டுத் தவணைக் கட்டணங்களுக்குரிய உரிய திகதிகளைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(c) Y/A 2023/24 இற்கான வருமான வரித் திரட்டைக் கம்பனி தாக்கல் செய்ய வேண்டுமா என்பதைக் **குறிப்பிடுக.** *(உங்கள் விடையை நியாயப்படுத்துக.)* (02 புள்ளிகள்)

(d) "அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதி" ஒருவராக இருக்கக்கூடிய இரண்டு (02) நபர்களைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

**நஸீர்** மற்றும் **டேவிட்** ஆகியோர் **"Winners"** என்ற பங்குடமையின் பங்காளர்கள் ஆவர். அவர்கள் முகாமைத்துவ ஆலோசனை சேவைகளை வழங்குகின்ற வணிகத்தில் ஈடுபட்டுள்ளதுடன் இலாப நட்டங்களை முறையே 2 : 1 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ள இணங்கியுள்ளனர். 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பங்குடமையின் வருமானக் கூற்று கீழே தரப்பட்டுள்ளது :

| | ரூபா | ரூபா |
|---|---|---|
| **வருமானங்கள் :** | | |
| ஆலோசனை சேவைகள் | | 31,340,000 |
| வாடகை வருமானம் | | 216,000 |
| நிலையான வைப்புக்கான வட்டி (நிகர) | | 5,700 |
| | | 31,561,700 |
| **செலவினங்கள் :** | | |
| சம்பளங்கள் | 12,870,000 | |
| கட்டடம் மீதான சோலைவரி (Rates) | 30,000 | |
| கணக்கீட்டுத் தேய்மானம் | 48,000 | |
| நன்கொடை | 75,000 | |
| பிற செலவினங்கள் | 3,564,000 | (16,587,000) |
| **நிகர இலாபம்** | | **14,974,700** |

கீழ்வரும் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) சம்பளங்கள் என்பது பங்காளர்களுக்குச் செலுத்தப்பட்ட பின்வரும் சம்பளங்களை உள்ளடக்கியுள்ளது :

**நஸீர்** : ரூபா1,800,000/-

**டேவிட்** : ரூபா 2,400,000/-

(2) கணக்கீட்டுத் தேய்மானமானது ரூபா 400,000/- கிரயத்தில் 2021 டிசெம்பரில் கொள்வனவு செய்யப்பட்ட கணினிகளுடன் தொடர்புடையதாகும். ஏனைய சகல சொத்துகளும் கணக்கீட்டு நோக்கத்திற்காகவும் அதே போன்று வரி நோக்கத்திற்காகவும் முழுமையாக தேய்மானஞ் செய்யப்படுகின்றன.

(3) கட்டடத்தின் அரைவாசிப் பகுதி பிறிதொரு தரப்பினருக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளதுடன், முழுக் கட்டடத்திற்குமான சோலைவரி பங்குடமையால் செலுத்தப்பட்டுள்ளது.

(4) ரூபா 75,000/- காசு நன்கொடை ஆனது கிராமத்துக் கோயில் ஒன்றிற்கு வழங்கப்பட்டது.

(5) பிற செலவினங்கள் வரி நோக்கங்களுக்காக அனுமதிக்கத்தக்கவை ஆகும்.

முற்பண வருமான வரி (AIT) / நிறுத்திவைத்தல் வரி (WHT) ஆனது நிலையான வைப்புகளுக்கான வட்டியில் கழிக்கப்பட்டுள்ளன.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

வரிமதிப்பாண்டு 2023/24 இற்காக பங்குடமை செலுத்த வேண்டிய வருமான வரியை **மதிப்பிடுக.**

(10 புள்ளிகள்)

பகுதி B முடிவு

# பகுதி C

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

**வரையறுக்கப்பட்ட பப்ளிக்கேசன் (தனியார்) கம்பனி** என்பது 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பனி ஆகும். இது இலங்கையில் உள்ள ஒரு பெரிய குழுமத்தின் வெளியீட்டுப் பிரிவு ஆகும்.

**வரையறுக்கப்பட்ட பப்ளிக்கேசன் (தனியார்) கம்பனி**யின் கீழ்வரும் தகவல்கள் 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுடன் தொடர்புடையவை ஆகும்.

(1) சகல செலவினங்களும் தாக்கல் செய்யப்பட்டு, சகல வருமானங்களும் செலவு வைக்கப்பட்டதன் பின்னர் 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரிக்கு முன்னரான நிகர இலாபம் ரூபா 103,450,000/- ஆகும். 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் மொத்தப் புரள்வு ரூபா 934,600,000/-.

(2) பிற வருமானங்கள் கீழ்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன :

| | ரூபா |
|---|---:|
| பங்கிலாப வருமானம் (WHT இன் நிகர) | 166,600 |
| நிலையான வைப்புகளுக்கான வட்டி வருமானம் (மொத்தம்) | 654,000 |
| | **820,600** |

(3) நிருவாக மற்றும் விநியோகச் செலவினங்கள் கீழ்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன :

- ஆண்டிற்கான தேய்மானக் கட்டணம் ரூபா 63,275,000/-
- இயந்திரமொன்றின் விற்பனை மீதான கணக்கீட்டு நட்டம் ரூபா 543,000/-
- ஆண்டிற்கான பணிக்கொடை ஏற்பாடு ரூபா 16,327,000/-
- LPL துடுப்பாட்டத் (கிறிக்கெற்) தொடருக்கான அனுசரணை ரூபா 4,000,000/-
- ஆண்டின் காலப்பகுதியில் புதிய டிஜிடல் தொடர்பாடல் தொழினுட்பங்கள் பற்றிய மாநாடு ஒன்றில் பங்குபற்றுவதற்காக இரண்டு பணிப்பாளர்கள் அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டனர். இதன் பொருட்டு, பங்கேற்றல் கட்டணமாக ரூபா 300,000/- ஐயும் விமானப் பயணச்சீட்டுகள் மற்றும் தங்குமிடத்தற்காக ரூபா 1,000,000/- ஐயும் கம்பனி செலவு செய்தது.
- கம்பனியானது இலங்கை SOS சிறுவர் கிராமங்களின் விளம்பரங்களை இலவசமாக வெளியிட்டது. அவற்றிற்கான கிரயம் ரூபா 600,000/- ஆக இருந்தது. மேலும், கம்பனியானது களனிப் பல்கலைக்கழகத்தில் உள்ள வெகுசனத் தொடர்பாடல் துறைக்கு ரூபா 500,000/- நன்கொடை வழங்கியது.

(4) ஆதனம், பொறி மற்றும் உபகரண விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

| சொத்துகள் | 2023 ஏப்ரல் 01 இல் மீதி (ரூபா) | சேர்ப்பனவுகள் (ரூபா) | அகற்றல்கள் (ரூபா) | 2024 மார்ச் 31 இல் மீதி (ரூபா) |
|---|---:|---:|---:|---:|
| காணி | 100,000,000 | - | - | 100,000,000 |
| கட்டடங்கள் | 96,000,000 | 600,000 | - | 96,600,000 |
| பொறி மற்றும் இயந்திரம் | 45,000,000 | 8,000,000 | 2,500,000 | 50,500,000 |
| அலுவலக உபகரணம் | 3,254,000 | - | - | 3,254,000 |
| கணினிகள் | 4,250,000 | - | - | 4,250,000 |
| | **248,504,000** | **8,600,000** | **2,500,000** | **254,604,000** |

- 2023 ஏப்ரல் 01 இல் உள்ளவாறான அனைத்துச் சொத்துகளும் வரிமதிப்பாண்டு 2020/21 காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டவை என்பதுடன் கொள்வனவுத் திகதியில் இருந்து மூலதன விடுதொகைகள் கோரப்பட்டன.
- ஆண்டின் காலப்பகுதியில், கம்பனியானது அலுவலக வளாகங்களைச் சுற்றி கைப்பிடிச் சுவரைக் (parapet wall) கட்டியிருந்ததுடன் அது ஆண்டின் காலப்பகுதியில் கட்டடத்திற்கான சேர்ப்பனவாகக் காட்டப்பட்டது.
- 2023 டிசெம்பரில் ரூபா 2,000,000/- இற்கு இயந்திரமொன்று விற்பனை செய்யப்பட்டதுடன், அவ்வாறு விற்பனை செய்யப்பட்ட இயந்திரத்திற்கு மாற்றீடாக ஒரு புதிய இயந்திரம் ஆண்டின்போது கொள்வனவு செய்யப்பட்டது.

(5) பதவி விலகிய ஊழியர் ஒருவருக்கு பணிக்கொடையாக ரூபா 1,600,000/- செலுத்தப்பட்டது.

(6) வரிமதிப்பாண்டு 2023/24 இற்கான வருமான வரியின் காலாண்டுத் தவணைக் கொடுப்பனவுகளாக கம்பனி ரூபா 20,000,000/- செலுத்தியுள்ளது.

(7) வங்கியானது வட்டி வருமானம் மீது 5% முற்பண வருமான வரியை (AIT) / நிறுத்திவைத்தல் வரியைக் (WHT) கழித்திருந்தது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

வரிமதிப்பாண்டு 2023/24 இற்கான **வரையறுக்கப்பட்ட பப்ளிகேசன் (தனியார்) கம்பனியின்** கீழ்வருவனவற்றை **மதிப்பிடுக** :

(a) வரிமதிக்கத்தக்க வருமானம்

(b) வரிவிதி வருமானம்

(c) செலுத்த வேண்டிய மொத்த வருமான வரி

(d) செலுத்த வேண்டிய மீதி / (மேலதிகமாகச் செலுத்திய) வருமான வரி

*(குறிப்பு: ஏதாவது செலவுகளை அனுமதிப்பதற்கான அல்லது அனுமதிக்காது விடுவதற்கான காரணங்களைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.)* (25 புள்ளிகள்)

## வினா 09

ஒரு மென்பொருள் பொறியியலாளரான **சாலிய பெரேரா** இலங்கையில் உள்ள புகழ்பெற்ற மென்பொருள் தயாரிப்புக் கம்பனியில் பணியாற்றுகின்றார்.

2023/24 ஆம் வரிமதிப்பாண்டு *(இதன் பின்னர் 'ஆண்டு' எனக் குறிப்பிடப்படும்)* தொடர்பில் **சாலிய** தொடர்பான கீழ்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

(1) **ஊழியத்திலிருந்தான வருமானம் :**

- மொத்தச் சம்பளம் - மாதாந்தம் ரூபா 300,000/-.
- முன்னைய ஆண்டின் செயலாற்றுகையின் அடிப்படையில் 2023 ஏப்ரலில் செலுத்தப்பட்ட மிகையூதியம் (Bonus) ரூபா 450,000/- ஆகும்.
- பயணக் கொடுப்பனவாக மாதாந்தம் ரூபா 60,000/- ஐக் கம்பனி செலுத்தியுள்ளது.
- கம்பனியால் ரூபா 100,000/- வரையான வாகனப் பராமரிப்புச் செலவினங்கள் மீளளிப்புச் (reimburse) செய்யப்படுகின்றன. ஆண்டின்போது வாகனப் பராமரிப்புச் செலவாக அவருக்கு ரூபா 80,000/- ஐக் கம்பனி மீளளிப்புச் செய்திருந்தது.
- அவருடைய மாதாந்த ஆயுள் காப்புறுதித் தவணைத்தொகை ரூபா 10,000/- கம்பனியால் மீளளிப்புச் செய்யப்பட்டது. இந்த நன்மை கம்பனியின் நிறைவேற்றுத்தர அலுவலர்களுக்கு மாத்திரமே கிடைக்கப்பெறுகிறது.

- 2023 ஏப்ரலில், அவர் ஊழியர் பங்கு விருப்பத்தேர்வுத் திட்டத்தின் கீழ், கம்பனியில் 1,000 பங்குகளைப் பெற்றுக் கொண்டார். ஒதுக்கீட்டின்போது ஒரு பங்கின் சந்தைப் பெறுமதி ரூபா 200/- ஆகக் காணப்பட்டதுடன் **சாலிய** ஒரு பங்கிற்கு ரூபா 50/- செலுத்தியிருந்தார்.
- ஆண்டிற்காகக் கழிக்கப்பட்ட தனியாள் முற்பண வருமான வரி (APIT) ரூபா 918,000/- ஆகும்.

(2) அவர் குருநாகலில் ஒரு தென்னந்தோட்டம் வைத்திருக்கிறார். ஆண்டிற்கான அதன் வருமான மற்றும் செலவின விபரங்கள் கீழ்வருமாறு :

| | ரூபா | ரூபா |
|---|---|---|
| தேங்காய்களின் விற்பனை | | 1,843,000 |
| கழி: செலவுகள் : | | |
| உரம் | 613,000 | |
| காவலாளியின் சம்பளம் | 300,000 | |
| தேய்மானம் | 100,000 | |
| தொலைபேசிக் கட்டணம் (50% **சாலிய**வின் தனிப்பட்ட அழைப்புக் கட்டணங்கள் தொடர்பானவை) | 60,000 | (1,073,000) |
| **நிகர இலாபம்** | | **770,000** |

ரூபா 1,200,000/- கிரயத்தில் 2021/22 வரிமதிப்பாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரம் தொடர்பான தேய்மானம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(3) ஆண்டின் காலப்பகுதியில் அவர் சில தற்காலிக IT சேவைகளை ஏற்றுக் கொண்டிருந்தார். இந்தச் சேவைகளில் இருந்து அவர் ரூபா 435,000/- வருமானத்தை ஈட்டியுள்ளார்.

(4) **சாலிய** வர்த்தக வங்கி ஒன்றில் ரூபா 1,000,000/- நிலையான வைப்பொன்றைப் பேணுகிறார். அது 2024 மார்ச் இல் முதிர்ச்சியடைந்தது (matured). வங்கியானது 5% நிறுத்திவைத்தல் வரியைக் (AIT) கழித்த பின்னர் அவரது சேமிப்புக் கணக்கிற்கு ரூபா 114,000/- ஐச் செலவு வைத்துள்ளது.

(5) **சாலிய** விலை கோரப்பட்ட பங்குகளில் சில முதலீடுகளைச் செய்துள்ளார். இதன் மூலம் 2024 மார்ச் இல் கிடைத்த நிகர பங்கிலாபம் ரூபா 44,200/- ஆகும்.

(6) **சாலியவுக்கு** இரத்தினபுரியில் ஒரு பரம்பரை வீடு உள்ளது. இது 2023 யூன் 01 ஆந் திகதியில் இருந்து ரூபா 25,000/- மாதாந்த வாடகையில் ஒரு குடும்பத்திற்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது. இவ்வீட்டை வாடகைக் குடியிருப்பாளரிடம் கையளிப்பதற்கு சற்று முன்பு அவ்வீட்டிற்கு வர்ணப்பூச்சு பூசுவதற்காக அவர் ரூபா 73,000/- ஐச் செலவிட்டிருந்தார்.

(7) ஆண்டின் காலப்பகுதியில், அங்கீகரிக்கப்பட்ட தரும ஸ்தாபனமான முதியோர் இல்லம் ஒன்றிற்கு ரூபா 100,000/- காசையும் ரூபா 25,000/- பெறுமதியான பொருள்களையும் அவர் நன்கொடையாக வழங்கியுள்ளார்.

(8) அவர் 2023/24 வரிமதிப்பாண்டிற்கான வருமான வரியின் தவணைக் கொடுப்பனவுகளாக ரூபா 160,000/- ஐச் செலுத்தியிருந்தார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

வரிமதிப்பாண்டு 2023/24 இற்கு **சாலியவுக்காக** கீழ்வருவனவற்றை **மதிப்பிடுக** :

(a) வரிவிதி வருமானம்

(b) செலுத்த வேண்டிய மொத்த வருமான வரி

(c) செலுத்த வேண்டிய மீதி / (மேலதிகமாகச் செலுத்திய) வருமான வரி

(d) வரிவிலக்கு வருமானம், ஏதாவது இருப்பின்

*(**குறிப்பு:** ஏதாவது வருமானம் வரி விதிக்கத்தக்கது அல்ல எனின், அதனைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.)*

(25 புள்ளிகள்)

பகுதி C முடிவு

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |